# சங்ககாலச் சேரர்கள்

**மு. கயல்விழி**
உதவிப் பேராசிரியர் (சுழற்சி:-இரண்டு), தமிழ்த்துறை
பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்

மலர்: 4
இதழ்: 3
மாதம்: ஜனவரி
வருடம்: 2020
P-ISSN: 2454-3993
E-ISSN: 2582-2810

## முன்னுரை

சேரர்கள் புராதன அரசு மரபினர். சேரநாடென்பது இன்றைய கேரளாவும், கொங்கு நாடும் சேர்ந்தபகுதியாகும். சேரர் தோற்றம் குறித்து தெளிவான கருத்து இதுவரை தெரிந்தில. சங்ககாலத்திற்கு முன்பிருந்தே இக்குலத்தவர் தமிழகத்தை ஆட்சிசெய்தனர். அசோகருடைய கல்வெட்டுகள் இவர்களைக் "கேரளபுத்திரர்" என்று அழைக்கின்றன. [1]தாலமி என்ற அயல்நாட்டுப் பயணி சேரரின் பழமையை உறுதி செய்வதுடன் அவர்களைச் "சேரலபுத்திரோஸ்" என்றழைக்கின்றார். [2]சேரர்கள் மலைநாட்டினர், கடல் வாணிகத்திற்கு முக்கியத்தும் நல்கியவர்கள், பனையின் பூவை மாலையைச் சூடியவர்கள், வலிமையான கடற்படையைக் கொண்டவர்கள். சேர மன்னர்களைப் பதிற்றுப்பத்து என்ற சங்கநூல் அழகாகப் புகழ்ந்துரைக்கிறது. சங்ககால சேரமன்னரைப் பற்றி ஆராய்வது மிகவும் பயனுடைத்து. சங்க இலக்கியங்கள் வாயிலாக அவற்றை ஈண்டு ஆராய்வோம்.

## சேரர் வரலாற்றை ஆய்வதற்குரிய சிக்கல்கள்

சேரர் வரலாற்றை ஆய்வதற்கு பல சிக்கல்கள் உள. அவை வருமாறு:

1. சேரர்கள் பற்றிய இலக்கிய ஆதாரங்கள் மிகவும் குறைவு. சோழர், பாண்டியர் குறித்து வெளிவந்த பல இலக்கிய ஆதாரங்கள் சேரர் குறித்து வெளிவரவில்லை.
2. சேரர் குறித்த தொல்லியல் ஆதாரங்களும் மிகவும் குறைவு. பிற தமிழ் மன்னர்கள் குறித்து வெளிவந்த கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள் போன்று சேரர் குறித்து அதிகம் வெளிவரவில்லை.
3. சேர மன்னர்களைப் பற்றி ஒரு சில வரலாற்று நூல்களே தமிழில் படைக்கப்பட்டுள்ளன. (சான்று:திரு.ஔவைதுரை சாமிப்பிள்ளை, திரு.க.கோவிந்தன் போன்றோர் மட்டும் சேர மன்னர்களை ஆராய்ந்து எழுதியுள்ளனர்). தமிழகத்தின் தலைசிறந்த ஆய்வாளர்களான திரு.ஓ.அ.நீலகண்டசாஸ்திரி, திரு.கே.கே.பிள்ளை, திரு.தி.வை.சதாசிவப்பண்டாரத்தார், திரு.மா.இராஜமாணிக்கம்பிள்ளை, திரு.மயிலை.சீனிவெங்கடசாமி போன்றோர் சோழர் மற்றும் பாண்டியர் குறித்து ஆய்வு நூல்களைப் படைத்துள்ளார்களேயன்றி சேரர் வரலாறு பற்றி நூல்கள் படைக்கவில்லை.

4. சேரர் குறித்த ஆய்வுத் தலைப்புகள் குறைந்த அளவே தேர்ந்தெடுக்கப்பட்டு ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. இதர தமிழ்மன்னர்கள் குறித்து மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகளைப் போன்று சேரர்கள் அதிகம் ஆராயப்படவில்லை (விதிவிலக்கு சி.பாலசுப்பிரமணியனின் சேரநாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள்).
5. தமிழக வரலாற்றை ஆராய்ந்த அறிஞர்கள் சேரர் வரலாற்றை பொதுவாக கூறிச் சென்றார்களேயன்றி அதற்குத் தனி முக்கியத்துவம்நல்கிதனிநூலாய்படைக்க -வில்லை. (சான்று: திரு.கே.கே.பிள்ளை அவர்கள் "தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்" என்ற நூலைப் படைத்தபின் "சோழர் வரலாறு" என்ற நூலைத் தனியாகப் படைத்தார். ஆனால் சேரர் வரலாற்றை படைக்கவில்லை).
6. வடநாட்டிலிருந்து போந்த பல்லவ மன்னர்களைத் தமிழர்களாக எண்ணி அதிக ஆய்வுகள் அவர்கள் குறித்து மேற்கொள்ளப்பட்டுள்ளன ஆனால் சேரர்களைப் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. செந்தமிழ்ச் செல்வர்களான சேரர்களைக் கேரளர் என்று பலர் எண்ணியதே இப்புறக்கணிப்புக்கு காரணம்.

எனவே உரிய சான்றுகளின்றி சேர மன்னர்களை ஆராய்வது ஆய்வாளர்களுக்கு மிகவும் சிக்கலான, கடினமான, சவாலான பணியாகும்.

## உதியன்சேரல்

சங்க இலக்கியங்கள் மூலம் தெரியவரும் முதல் சேர மன்னன் உதியன் சேரல் ஆவான். இவனுக்கு முன்பு பல சேரமன்னர்கள் நாட்டை ஆண்டுள்ளனர். தன்முன்னோர்கள் வழங்கியஅரசைஇவன்விரிவுபடுத்தினான்.

**"நாடு கண் அகற்றிய உதியன் சேரல்"**

**(அகம்.65:53)**

இவன் முதியர் என்ற தன் நண்பனைப் பாண்டியர் படையெடுத்து வந்து அழிக்க முனைந்தபோது படைகொண்டுகாத்தான். இவன் புலவர்களை ஆதரிக்கும் நற்குணத்தினன்.

**தொய்யாநல்லிசை முதியர்ப் பேணிய**
**உதியன் சேரல்**

**(அகம்.332:7)**

இனிய இசையை நுகரும் பாங்கினன் என்பதை "இன்னிசை முரசின் உதியன் சேரல்" என்று பதிற்றுப்பற்று விளக்குகின்றது.

## நெடுஞ்சேரலாதன்

சேர அரசர்களில் சிறந்தவன் இவனே. தந்தை அந்துவன் சேரல், தாய் வேண்மாள். பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்தில் பாடப் பட்டவன். சங்க இலக்கியங்கள் பலவற்றின் மூலம் இவன் சிறந்த போர் வீரன் என்பதை அறியலாம். இவன் மேலைக் கடலில் இருந்த பகைவரான கடம்பரைக் கொன்று அவர்களின் காவல் மரத்தை அழித்தான்.

**பலர் மோசித்து ஓம்பியதிரள் பூங்கடம்பின்**
**கடியுடை முழு முதல் துமிய ஏ ஏய்**
**வென்று எரி முழுங்கு பனை செய்த**
**வெல்போர்**

**(பதிற்.11:12-14)**

பெரும் வெற்றி வீரனான நெடுஞ்சேரலா தன் வடஇந்தியாவின் இமயம் வரை படையெடுத்துச் சென்று வெற்றி பெற்று இமயத்தில்விற்க்கொடியைப்பொறித்தான்.

**"ஆரியது வன்றிய பேர் இசை இமயம்**
**தேன் அம்குமரியோடு ஆயிடை**
**மன்மீக் கூறுநர்மறம் தபக் கடந்தே"**

**(பதிற்.11 :23-25)**

வடநாட்டில் தன்னால் வெல்லப்பட்ட ஆரிய அரசர்களிடம் திரையும் பெற்றான். இவனது அரசு இமயம் முதல் குமரிவரை

பரவியிருந்தது. பிற அரசர்கள் போலல்லாது போரில் பெருவீரத்துடன் யானை மீதேறி வீரர்களுக்கு முன்னே போர்களம் புகும் இயல்பினன்.

**வேன்று எறி முழுங்கு பனை செய்த வெல்போர்**
**நார்அரிநறவின்ஆரமார்பின்**
**போர்அடுதானைச்சேரலாத**
**(பதிற்.11:14-17)**

**பல்யானை செல்கெழுகுட்டுவன்**

இவன் சிறந்த போர் வீரனாவான. இவன் நாடு பூழிநாடாகும். எனவே இவன் பூழியர் கோன் என்று அழைக்கப்பட்டான். ஆனை மலைக்குத் தெற்கே உள்ள உம்பர்க் காட்டை வென்றெடுத்தான்.

**"ஊம்பற் காட்டைத்தன் கோல்நரீஇ"**
**(பதிற்.3:2)**

இவன் தன்னுடைய எதிரிகள் நிறைந்த அகப்பாக் கோட்டையைத் தாக்கி தீயிட்டு அழித்தான்.

**ஆகப்பாஎறிந்துபகல்தீவேட்டு**
**(பதிற்.3:3)**

இவனது வலிமையைக் கண்டு பொறாமை கொண்ட சோழனும், பாண்டியனும் ஒன்று சேர்ந்து இவனை ஒழிக்க முயன்றனர். வேளிர்களும் அவர்களுக்குத் துணைநின்றனர். அவர்கள் அனைவரும் போரில் தோற்றோடினர்.

**பனைகெழு வேந்தரும் வேளிரும்ஒன்றுமொழிந்து**
**(பதிற்.30:30)**

**நார்முடிச்சேரல்**

களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் என்று இவன் சிறப்பிக்கப்பட்டான். இவன் தந்தை நெடுஞ்சேரலாதன் ஆவான். இவன் எழில் மலையை ஆண்ட நன்னன் என்பவனுடன் வாகை என்ற இடத்தில் போரிட்டான். இப்போரில் நன்னன் கொல்லலப்பட்டு அவன் நாடும் கைப்பற்றப்பட்டது.

**பொலம் பூண்நன்னன் பொருது களத்து ஒழிய**
**(அகம்.99:19)**

தன் பகைவனான பாண்டியனுடன் போரிட்டு அவன் படைகளை அழித்தான். பாண்டியரின் படைத் தலைவர்களான "நெடுமிடல்" மற்றும் "கொடுமிடல்" ஆகியோர் போர்க்களத்தில் கொல்லலப்பட்டனர்.

**நெடுமிடல் சாய, கெடுமிடல் துமிய**
**(பதிற்.32:10)**

**சேரன்செங்குட்டுவன்**

இவன் கடல் பிறகொட்டிய செங்குட்டுவன் என்று சிறப்பிக்கப்படுகின்றான். தந்தை நெடுஞ்சேரலாதன், தாயார் மணக்கிள்ளி. இவன் தலைநகரம் வஞ்சி, துறைமுகம் முசிறி. இது புகழ் பெற்ற கடற்கரைப் பட்டினமாக அக்காலத்தில் திகழ்ந்தது. செங்குட்டுவன் சகோதரனே புகழ் மிக்க இளங்கோவடிகள் ஆவார். செங்குட்டுவனே புகழ் பெற்ற கண்ணகிக்குக் கோயில் அமைத்தவன். இவன் நண்பனான அறுகையைச் சிறைபிடித்த மோக்கூர்ப் பழையனைத் தோற்கடித்தான். பழையனுக்குச் சோழனும், பாண்டியனும் துணைநின்றனர். இவர்கள் அனைவருமே தோற்றோடினர்.

**நிறம் படுகுருதி நிலம் படர்ந்து ஓடி**
**மழைநாட்புனலில் அவல்பரந்து ஒழுக**
**படுபிணம் பிறங்கபாழ்பலசெய்து**
**(பதிற். 49:11-13)**

மேலும் தன் எதிரிகள் அனைவரையும் "குராலம் பறந்தலை" என்ற இடத்தில் ஒழித்தான்.

**கவலை கவற்றும் குரால் அம் பறந்தலை**
**முரசுடைத் தாயத்து அரசு பல ஓட்டி**
**(பதிற் .49:19-20)**

செங்குட்டுவனின் உறவினரான கிள்ளிவளவன் சோழ அரசுக் கட்டில் ஏற முயன்றபோது அவன் தாயாதிகள் எதிர்த்தனர். ஒன்பது பேரான அவர்கள் அனைவரும் நெரிவாயில் என்ற இடத்தில் செங்குட்டுவனால் தோற்கடிக்கப் பட்டனர். கிள்ளிவளவன் அரசனாக முடிசூடினான்.

**"ஆராச் செருவின் சோழர் குடிக்கு உரியோர்**
**ஒன்பதின்மர் வீழ"**
**(பதிற்.5:18-19)**

மேலும் "வியலூர்", கொடுங்கூர் போன்ற பட்டினங்களையும் இவன் தாக்கியழித்தான். செங்குட்டுவன் கடற்போரில் மிகவும் வல்லவன். மிகச்சிறந்த கடற்படையைக் கொண்டிருந்தான்.

**"படைநிலா இலங்கு கடல் மருள் துணை**
**மட்டு அவிழ் தெரியல் மறப்போர்க் குட்டுவன்"**
**(அகம்.212:15-16)**

**"உரைதிரைப் பரப்பிற் படுகடல் ஓட்டிய**
**வெல்புகழ் குட்டுவன் கண்டோர்"**
**(பதிற்-46:12-13)**

சங்ககாலத்தில் புகழ்பெற்று விளங்கிய தகடூரையும் இவன் வென்றெடுத்தான். இமயம் வரை சென்று வடஇந்திய மன்னர்களை வென்று இமயத்தில் சேரரின் விற்கொடியைப் பொரித்தான்.

**"வடபுல இமயத்து வாங்குவிற் பொறித்த**
**எழு உறழ் திணி தோள் இயல் தோக் குட்டுவன்"**
**(சிறுபா:48-49)**

இவன் வடஇந்திய மன்னர்களை வென்று இமயத்திலிருந்து கற்கள் கொண்டு வந்து கண்ணகிக்குச் சிலையெடுத்துப் புகழ் பெற்றான்.

**ஆடுகோட்பாட்டு சேரலாதன்**

இவன் தந்தை நெடுஞ்சேரலாதன், தாய் வேளாவிக் கோமன் பதுமன் மகள். இவனது தலைநகர் பந்தர். இது மிகச்சிறந்த துறைமுகமாக நகராக அக்காலத்தில் திகழ்ந்தது.

**"நன் கல வெறுக்கை துஞ்சம் பந்தர்"**
**(பதிற்.55:4)**

இவனது நாடு "குட்டநாடு" ஆகும். "குடநாடு" என்று அழைக்கப்பட்ட மலை நாட்டையும் இவன் வென்றெடுத்தான்.

**நனந் தலை வேந்தர் தார் அழிந்து அலற**
**நீடு வரை அடுகத்த நாடு கைக்கொண்டு**
**(புறம்.55:17-18)**

மேலும் வடஇந்தியாவிலிருந்த தண்டகாருண்யப் பகுதியையும் இவன் வென்றெடுத்தான். இவன் ஆடல் கலையில் வல்லவன் என்பதுடன், துணங்கைக் கூத்தாடுவதில் நிபுணனாகவும் திகழ்ந்தான்.

**"முழ இமிழ் துணங்கைக்கூத் தழு உப் புணை ஆக"**
**(பதிற்.52:14)**

**அந்துவன் சேரல்**

"சேரமான் அந்துவன் சேரல் இறும்பொறை" என்று இவன் சிறப்பிக்கப்பட்டான். இவன் தலைநகர் கருவூர் ஆகும். இவன் கோப்பெரு நற்கிள்ளி என்ற சோழனின் சமகாலத்தவன். புலவர் மோசிக்கீரனாரின் ஆருயிர் நண்பன். இவன் கல்வியும், அறிவும் மிக்கவன்.

**"நெடு நுண் கேள்வி அந்துவற்க்கு"**
**(பதிற் 7:2)**

**செல்வக்கடுங்கோ வாழியாதன்**

இவன் தந்தை அந்துவன் சேரல், தாய் பெருந்தேவி. இவனது நாடு பூழிநாடு. இதில் நேரிமலையும், செருப்புமலையும் இடம் பெற்றிருந்தன. இவன் தலைநகர் நறவு என்ற பட்டினமாகும்.

> ***"கோடு பல விரிந்த நாடு காண் நெடுவரை***
> ***கூடா நறவின் நான் மகிழ் இருக்கை"***
> ***(பதிற்.85:7-8)***

இவன் சிறந்த கொடையாளி. முத்து, களிறு, மா ஆநிரை போன்றவற்றைப் புரவலருக்கு வாரிவழங்கினான். பகைவரை வென்று அதன் மூலம் ஈட்டிய பெரும்பொருளைப் புலவர்களுக்குத் தானமாக வழங்கினான்.

> ***"பகைபுல மன்னர் பணி;திறை தந்து நின்***
> ***நகைப்புல வாணர் நல்குரவு அகற்றி"***
> ***(பதிற்.387:12-13)***

வேள்விகள் பல புரிந்து அந்தனருக்கும் வாரிவழங்கும் வள்ளலாகவும் திகழ்ந்தான்.

> ***"உரைசால் வேள்வி முடித்த கேள்வி***
> ***அந்தணர் அருங் கலம் ஏற்ப"***
> ***(பதிற்.64:4-5)***

**தகடூர்எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை**

செல்வக்கடுங்கோ வாழியான் மற்றும் பதுமன் மகளுக்கு மகனாகப் பிறந்தான். புகார் செல்வன் என்று சிறப்பிக்கப்பட்டான். இவன் பூழிநாட்டை ஆண்டவன். தன் எதிரியான காமூரை ஆண்ட கழுவுள் என்பவனைத் தோற்கடித்து அவன் தலைநகரைத் தீக்கிரையாக்கினான்.

> ***"கழுவுள் தலைமடங்க பதிபாழாக"***
> ***(பதிற்.17:17)***

மேலும் கொல்லிமலையின் அதியமானையும் தோற்கடித்தான். தகடூரைத் தாக்கி எழினி என்பவனையும் கொன்றான். இவன் வேள்விகள் புரிவதில் வல்லவன்.

> ***"வேள்வி வேட்டனை உயர்ந்தோர் உவப்ப"***
> ***(புறம்.74:1)***

**இளஞ்சேரல் இரும்பொறை**

இவன் தந்தை குட்டுவன் இரும்பொறை, தாய் அந்துவஞ்செள்ளை. இவன்தலைநகரம் நறவு என்ற ஊர். இவனது துறைமுகம் தொண்டி. இவன் பெரிய போர்வீரன் ஆவான். இவன் விச்சிமலையை (பச்சைமலை) ஆண்ட விச்சிக்கோவை வென்றான். பொத்தியை ஆண்ட பெருஞ்சோழனையும் தோற்கடித்தான். இவனால் தோற்கடிக்கப்பட்ட பெருஞ் சோழன் கோப்பெருஞ் சோழனாவான்.

> ***"ஒன்னாப் பூட்கைச் சென்னியர் பெருமான்***
> ***இட்ட வெள்வேல்"***
> ***(பதிற்.85:34)***

வித்தை என்ற ஊரையாண்ட பாண்டியன் மாறன் என்பவனையும் கொன்றான். புகார் என்ற காவிரிப்பூம்பட்டினத்தின் பூதச்சதுக்கத்தில் இருந்த பூதச் சிலைகளை எல்லாம் கவர்ந்துவந்து தன் நாட்டில் நிர்மானம் செய்தான். போரின் மூலம் சேர்த்த செல்வத்தை எல்லாம் வறியவருக்கு வாரிவாரி வழங்கினான்.

> ***"இல்லோர் புன்கண் தீர நல்கும்"***
> ***(பதிற்.86:6)***

**சேரன் பெருஞ்சேரலாதன்**

இவன் பெரும் வீரன். ஆனால் காரிகால் சோழனுடன் வெண்ணிப்பறந்தலை என்ற இடத்தில் போர்புரிந்து தோற்றான். போரில் கரிகாலன் வெற்றி பெற்றதுடன், அவன் வீசிய வேல் இவன் மார்பைத் துளைத்தது. இந்தப் புறப்புண்ணுக்கு நாணி வடக்கிருந்து உயிர் துறந்தான்.

**"கரிகால் வளவனோடு வெண்ணிப்பறந்தலைப்
பொருது புண் நாணிய சேரலாதன்
அழிகள் மருங்கின் வாள் வடக்கிருந்தான்"**
**(அகம்.55:10-12)**

**சேரமான் பெருஞ்சோற்று உதியன்**

பெருஞ்சோற்று உதியன் பரந்த அரசை உடையவன். வானவரம்பன் என்று புகழப் பட்டவன். குருஷேத்திரத்தில் பாண்டவருக்கும், கௌரவருக்கும் இடையே நடந்த பாரதப் போரில் இருதிறத்தாருக்கும் உணவளித்து சிறப்பித்தான்

**"அலங்கு உள்ளப் புரவி ஐவரோடு சினைஇ
நிலம் தலைக்கொண்ட பொலம் பூந் தும்பை
ஈர் ஐம்பதின்மரும் பொருது களத்து ஒழிய
பெருஞ் சோற்று மிக பதம் வரையாது
கொடுத்தோய்"**
**(புறம்.2:13-16)**

**யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை**

மாந்தை என்ற ஊரைத் தலைநகராக உடையவன் இவன். இவனது நாடு மாந்தரல் நாடு. தன் எதிரிகளைத் தொண்டி என்ற நகரில் தோற்கடித்து அழித்தான். அந்நகரத்தைத் தன் தலைநகராக்கிக் கொண்டான். இவன் கொல்லி மலையையும் வென்றெடுத்தான்.

**"வேந்து தந்த பணி திறையான்
சேர்ந்தவர்தம் கடும்பு ஆர்த்தும்
ஓங்கு கொல்லியோர் அடு பொருந"**
**(புறம்.22:26-28)**

தலையானங்கனத்து செருவென்ற நெடுஞ் செழியன் இவனைத் தோற்கடித்து சிறை பிடித்தான். ஆனால் தந்திரமாகத் சிறையிலிருந்து தப்பினான்.

**கருவூர் எறிய ஒல்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை**

இவன் "கானக நாட்டினன்" என்று அழைக்கப்படுகின்றான். எனவே காடுகள் மிகுந்த உம்பற்காட்டை இவன் ஆண்டிருக்க வேண்டும். கருவூர் இவன் தலைநகராகும். வாட்போரில் வல்லவன் என்பது "ஒள்வாள்" என்ற அடைமொழியின் மூலம் அறியலாம்.

**சேரமான் பாலைப்பாடிய பெருங்கடுங்கோ**

இவர் பாலைத்திணைப் பாடுவதில் வல்லவர். வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர். எதிரிகளை அழித்து அவர்களின் பல கோட்டைகளைத் தன்வசமாக்கியவர்.

**"வெப்பு உடைய அரண் கடந்து
துப்பு உறுவர் புறம் பெற்றிசினே"**
**(புறம்.11:8-9)**

**சேரமான் மாந்தரன்சேரல் இரும்பொறை**

இவன் சோழன் பெருநற்கிள்ளியுடன் போரிட்டுத் தோற்றான். புறநானூற்றைத் தொகுத்தவன் இவனே. விளங்கில் என்ற ஊரைப் பகைவர் தாக்க முனைந்தபோது தன் வாட்படைக் கொண்டு காத்தான்.

**விளங்குசீர் விளக்கில் விழுமம் கொன்ற
களம் கொள் யானை கடுமான் பொறைய**
**(புறம்.53:4-5)**

**வானவன் சேரல்**

வானவன் சேரல் தொண்டி, மாந்தை ஆகிய கடற்கரைப் பட்டினங்களை உடையவன். சிறந்த கடற்படையைப் கொண்டவன். இவன் வணிகக் கப்பல்கள் பல கொண்டு மேலைக் கடலில் வாணிகம் செய்து பொன்னை வாரிக் குவித்தவன்.

**"சினம் மிகு தானை வானவன் குடக்கடல்
பொலம் தரு நாவாய் ஓட்டிய அவ்வழி
பிற கலம் செல்கலாது"**
**(புறம்.126:14-16)**

**ஏனாதி திருக்குட்டுவன்**

ஏனாதி "வெண்குடை" என்னும் ஊரை ஆண்டவன். மிக்க கொடைத்தன்மை உடையவன். ஏனாதி என்றால் படைத்

தலைவன் என்று பொருள். எனவே இவன் சிறந்த போர் வீரனாகத் திகழ்ந்தான்.

### சேரமான் கணைக்கால் இரும்பொறை

சேரமான் தன்மான உணர்வும், சுயமரியாதையும் உடையவன். சோழன் செங்கணான் என்பவன் இவனைத் தோற்கடித்து குடவாயில்கோட்டத்தில் சிறையிலடைத்தான். தாகத்தால் இவன் நீர் வேண்ட காவலர் இவனை அவமானம் செய்து நீர் வழங்கினர். அதைத் தன்மானத்தால் அருந்தாமல் உயிர் நீத்தான்.

> **"வயிற்று தீத் தணிய**
> **தாம் இரந்து உண்ணும் அளவை"**
> (புறம்.74:5-6)

### முடிவுரை

> **"மாவீற் றிருந்த பெருஞ்சிறப்பின்**
> **மன்னுந் தொன்மை மலைநாட்டு"**

என்று சேரநாட்டின் பழமைச் சிறப்பைச் சேக்கிழார் பெருமான் புகழ்ந்துரைக்கின்றார். பழந்தமிழ் மன்னர்களான சேரர்கள் சிறப்பும், பருமையும் ஒருங்கே கொண்டவர்கள். அவர்கள் மலைநாட்டைச் சார்ந்தவர்கள். வீரத்தையும், தன்மானத்தையும் இருகண்களாகக் கருதியவர்கள். தமிழர் பெருமையைத் தரணி யெங்கும் பறை சாற்றியவர்கள். தமிழகத்தின் எல்லையை இமயம் வரை கொண்டு சென்றவர்கள். கண்ணகிக்குக் கோயில் எடுத்து கற்புநெறி போற்றிய பண்பாளர்கள். கொடை வழங்குவதில் ஈடு இணையற்ற வள்ளல்கள். ஆனால் விதியின் விளையாட்டால் "சேரலம்" என்பது "கேரளமானது". தமிழ்மொழி சிதைந்து மலையாளமானது. ஆரியத்திலிருந்து (வடஇந்தியா) போந்த நம்பூதிரி பிராமணர்களின் வருகையால் சேரநாட்டு மக்கள் தங்கள் பழஞ்சிறப்பை இழந்தனர். தமிழ்க் கலாச்சாரம் சிதைந்து சின்னா பின்னமானது. புராதன சேரமன்னர்களின் சிறப்பான சரித்திரம் இருட்டடிப்பு செய்யப் பட்டது. சேரநாட்டுச் செந்தமிழ்மக்கள் தம் பழம்பெருமையை இழந்தது இந்நூற்றாண்டின் மாபெரும் காலப்பிழையாகும்.

### சான்றெண்விளக்கம்

1. தமிழ்நாட்டுவரலாறு - சங்ககாலம் - அரசியல், 1983, த.பா.நி,சென்னை, ப:13.
2. துரைசாமிப்பிள்ளை.ஔவை,2002, சேரமன்னர் வரலாறு, வள்ளுவர் பண்ணைப: 59.

### பார்வை நூற்பட்டியல் (Bibliography)

1. அகநானூறு, 2007, நியூசெஞ்சூரிபுக் ஹவுஸ், சென்னை,
2. புறநானூறு, 2007, நியூசெஞ்சூரிபுக் ஹவுஸ், சென்னை,2007
3. பதிற்றுப்பத்து,2007,நியூசெஞ்சூரிபுக் ஹவுஸ், சென்னை, 2007
4. சிறுபாணாற்றுப்படை, 2007, நியூ செஞ்சூரிபுக் ஹவுஸ், சென்னை,
5. ஔவைதுரைசாமிப்பிள்ளை, 2002, சேர மன்னர் வரலாறு, வள்ளுவர் பண்ணை, சென்னை,
6. தமிழ்நாட்டு வரலாறு-1983, சங்ககாலம், த.பா.நி, சென்னை,